**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**S.C. No:161/2024**

**Dated: 26.05.2026**

**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு. விக்னேஷ்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1முதல் எதிரிகள் ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கந்தர்வக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 377/22 வழக்கை விசாரித்த உதவி ஆய்வாளர் தமிழ்செல்வன் கையொப்பம் எனக்கு பரிட்சயமானதாகும். அவர் பணி ஒய்வு பெற்று தற்போது தஞ்சாவூர் A to Z மருத்துவமனையில் மிகவும் சுகவீனம் காரணமாக மருத்துவசிகிச்சையில் உள்நோயாளியாக உள்ளதால் வழக்கை விரைந்து விசாரித்து முடிக்கும் வகைக்கு நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 12.09.2022 ம் தேதி 13.00 மணிக்கு கந்தர்வக்கோட்டை காவல் உதவி ஆய்வாளராக இருந்த

தமிழ்செல்வன் மற்றும் ரமேஷ் ஆகீயோருடன் கந்தர்வக்கோட்டை காவல்நிலைய சரக எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த போது ரகசிய தகவலாளி நேரில் சென்று Hans போதைப்பொருள் விற்பதாக தகவல் கூறியுள்ளதன் அடிப்படையில் கந்தர்வக்கோட்டை to தஞ்சாவூர் ரோட்டில் பஜார் சாலையில் உதயம் மளிகைக்கடையை கண்காணித்த போது அந்த கடையில் உரிமையாளரான பீர்முகமது மற்றும் அவரது கடை விற்பனையாளர்கள் சாகீர்உசேன் மற்றும் சூர்யராஜ் கடைக்குள் இருந்த வெள்ளைநிற சாக்குப்பையில் இருந்து Hons vimal பாக்கு என்ற போதைப்பொருளை பொதுமக்களுக்கு அநியாய விலைக்கு விற்று கொண்டிருந்துள்ளார்கள். இதனை சார்பு ஆய்வாளர் பார்ட்டி சகிதம் சென்று கண்டுபிடித்து கையும் மெய்யுமாக எதிரிகளையும் Hons போதைப்பாக்குகள் 25 பாக்கெட்டுகள் அடங்கிய 7.500 கி.கி Hons vimal பாக்கு என்ற போதைப்பொருளையும், பின்பு 53 பாக்கெட்டுகள் அடங்கிய 4.600 கி.கி அடங்கிய பான் மசாலா ஆகியவற்றை இவ்வழக்கின் எதிரிகள் பொதுமக்களுக்கு விற்பனைக்காக கடையில் வைத்திருந்ததாலும், அந்த பாக்கை பொது மக்கள் உட்கொள்ளும் போது வாய்புற்று நோயையும், நுரையீரல் புற்றுநோயையும் ஏற்படுத்தவும், உயிருக்கு ஆபத்தாகவும் அமையக்கூடிய போதைப்பாக்குகளை எதிரிகளிடமிருந்து சார்பு ஆய்வாளர் தமிழ் செல்வன், சாட்சிகளாக சிறப்பு உதவி ஆய்வாளர் சோலை மற்றும் தலைமை காவலர் திரு. ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார்.அதற்கான கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல்நிலையம் வந்து எதிரிகள் பெயரில் காவல்நிலைய குற்ற

எண் 377/22 ன் பிரகாரம் சார்பு ஆய்வாளர் தமிழ்செல்வன் இ.த.ச பிரிவுகள் 273, 328, உடனினைந்த 6(a) r/w 24(1) ன் பிரகாரம் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அவர் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2** ஆகும். பின்பு எதிரிகள் எந்த துன்புறுத்தலும் இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தமிழ்செல்வன் கையொப்பம் செய்துள்ளார். பின்னர் வழக்கு சொத்தினை படிவம் 95 மூலமாக கந்தர்வக்கோட்டை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அதற்கான ஆர்.பி.எண் 38/2022 ஆகும். அந்த **படிவம் எண் 95 அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 7.500 கி.கி Hons போதைப்பொருள் கந்தர்வக்கோட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 2 இரு சக்கர வாகனங்களின் புகைப்படங்கள் 2 எண்ணிக்கை அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரிக்க விபரம் சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவத்து அன்று கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் நான் பணி புரியவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார் கொடுத்தது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது, புலன் விசாரணை அதிகாரி ஆகிய 3ம் ஒரே நபர் என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். விசாரணையில் சம்பவ இடத்தில் தனிநபர்களின் சாட்சியாக இருக்க அழைத்ததாகவோ, அவர்கள் வரமறுத்ததாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரிலே குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் பொது நாட்குறிப்பேடை நான் பார்வையிடவில்லை

என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொல்லும் தேதியில் எந்த வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எந்த ஒரு பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரிகள் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும், முறையாக புலன்விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும், மற்ற கடைக்காரர்களின் முன்விரோத அடிப்படையில் புள்ளியல் நோக்கத்திற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.